# நாடு கடந்த தமிழீழ அரசவையின் ஜனநாயக அணி
Transnational Government of Tamil Eelam - Democrats (TGTE-Democrats)

## ஊடக அறிக்கை
Press statement

25 மார்ச் 2011

### நாடுகடந்த தமிழீழ அரசவையின் ஜனநாயக அணியின் அரசவை உறுப்பினர்கள் மேற்கொள்ளும் சத்தியப்பிரமாணம்

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான யாப்பு, அது நிறைவேற்றப்பட்ட விதம் ஆகியவற்றில் ஜனநாயக ரீதியாக எழுந்த கருத்து முரண்பாடுகளை ஒருபுறம் கையாளும் அதேவேளை, அமைக்கப்பட்டிருக்கும் அரசாங்கக் கட்டமைப்பின் செயற்பாடுகள் நல்லமுறையில் இடம்பெறவேண்டும் என்பதற்கான ஒத்துழைப்பை நாடு கடந்த அரசாங்கத்திற்கு வழங்குவோம் என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றோம்.

நா.க.த.அ அரசவையினாலும், எமது மக்களாலும் அங்கீகரிக்கப்படவேண்டிய யாப்பு குறித்த முக்கிய அடிப்படைகளை, அதற்குரிய வகையில் அடுத்த தேர்தலுக்கு முன்னர் அணுகுவோம் என்று எமது நிலைப்பாட்டை ஏற்கனவே கடந்த 06 மார்ச் 2011 அன்று தெரிவித்திருந்தோம். அதுவரை ஜனநாயக அணியாக, கட்டுக்கோப்பான முறையில் நாடு கடந்த அரசாங்க அரசவைக்குள்ளிருந்தே செயற்படுவோம் என்ற எமது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

ஒழுங்குமுறையாக நிறைவேற்றப்படாத, பல குறைபாடுகளையுடைய யாப்பினை ஏற்றுக்கொள்ளும்படி எம்மீது விடாப்பிடியான ஓர் அழுத்தத்தைப் பிரயோகிப்பது போலக் காட்டியவாறு, எம்மை அரசவையிலிருந்தே நிராகரிக்கும் நோக்கில் தொடர்ந்தும் செயற்பாடுகள் இடம்பெற்று வரும் இந்நிலையில், நாம் நாடு கடந்த அரசாங்கத்தின்மீது தெளிவானதொரு சத்தியப்பிரமாணத்தை மேற்கொள்வதாக முடிவெடுத்திருக்கிறோம்.

எமது சத்தியப்பிரமாணத்தின் வாசகங்களின் பிரதியை இத்தோடு இணைத்து, அனைவருக்கும் தெளிவுபடுத்தும் விதத்தில் வெளிப்படைத்தன்மையோடு இதர அரசவைப் பிரதிநிதிகளுக்கும் எமது மக்களுக்கும் முன்வைக்கிறோம்.

இலண்டனில் இயங்கும் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் எனும் அமைப்பு, பிரித்தானியாவிலிருந்து தெரிவான பிரதிநிதிகளோடு கருத்துப்பரிமாற்றம் செய்யும் நோக்கோடு கலந்துரையாடலை நடாத்தியிருந்தது. இதில் மார்ச் 12ம் திகதியன்று பங்குகொண்டு எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம். சுமுகமான முறையில் மூடிய அறையில் சுயாதீன ஊடக சாட்சியங்கள் முன்னால் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கும் இணக்கம் தெரிவித்திருந்தோம்.

ஆயினும், இது தொடர்பான எதுவித சுமுகமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது, மீண்டும் பின்புல சக்திகளின் தூண்டுதலுடன் “பிரிந்துசெல்பவர்கள்” என்பதான பாணியில் எம்மீது ஓர் ஊடகப் போர் நிகழ்த்தப்படுகிறது.

ஆனாலும், இவற்றுக்கும் அப்பால் நாம் ஏற்கனவே தெளிவுபடுத்தியதைப்போல, எமது அணியின் நிறைவேற்று மையமும், ஆணை மையமும் எதுவிதமான முரண்பாடுகளையும் பகிரங்கப்படுத்தி, எதிரியின் இலக்கு நோக்கிய செயற்பாடுகளுக்கு வகை செய்யாது, பொறுமையாக தொடர்ந்தும் செயற்படுகிறோம் என்பதை எமது மக்களுக்கும், தமிழீழ விடுதலையை மட்டுமே இலக்காகக் கொண்ட தமிழ்த் தேசிய விடுதலைத் தளங்களுக்கும் தெரியப்படுத்துகிறோம்.

தமிழீழ விடுதலை நோக்கிய எமது போராட்டப் பாதையில், அதே இலக்குடன் பயணிக்கும் தேசிய, சர்வதேச அமைப்புக்களை இணைத்தும், அவற்றுடன் இணைந்தும் எதுவித விட்டுக்கொடுப்பும், சமரசமும் அற்ற வகையில், இறைமையுள்ள, சுதந்திர தமிழீழ தனியரசை அமைக்கும்வரை நாம் தொடர்ந்து பயணிப்போம் என்பதையும் அறுதியிட்டுத் தெரிவிக்கின்றோம்.

வாழ்க தமிழ்! வெல்க தமிழீழம்! நாடு கடந்த தமிழீழ அரச கோட்பாடு மேலும் வளர்க!

இவ்வண்ணம்,



வித்தியா ஜெயசங்கர் (ஜேர்மனி), சசிதர் மகேஸ்வரன் (பிரித்தானியா), கிருசாந்தி சக்திதாசன் (பிரான்ஸ்)

நிறைவேற்றுமையம்
நாடு கடந்த தமிழீழ அரசவையின் ஜனநாயக அணி